**OS.No.186/2012**

**நாள்:31.07.2018**

வா.சா.2 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் அரூர் கீளாப்பாளையம் தொடக்கபள்ளி ஆசிரியராக பணிபுரிகிறேன். இந்த சங்கதியை என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ளீர்களா என்றால் தெரியாது. என் குடும்ப சொத்துக்களை பொறுத்து வழக்கு தாக்கல் செய்து நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன் என்றால் சரிதான். ஆகையால் நீதிமன்ற நடவடிக்கைகள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். காளிரத்தினம் அவரது தம்பி குமரேசன் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் குமரேசன் தான் முதலில் காளிரத்தினம் மீது வழக்கு தாக்கல் செய்தார், காளிரத்தினம் குமரேசனுக்கு எதிர் வழக்கு போட்டார். காளிரத்தினம் எதற்காக வழக்கு தாக்ஙகல் செய்தார் என்றால் காளிரத்தினம் நிலம் குமரேசனுக்கு சேர்வதாக குமரேசன் வழக்கு போட்டுள்ளார் என்று நான் கேள்விபட்டேன். ச.எண்.26 என்ற சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளதாக கேள்விப்பட்டேன். சொத்தின் விஸ்தீரணம் தோரயமாக 9 ஏக்கர் இருக்கும். காளியப்பன் தாக்கல் செய்த சொத்தின் செக்குபந்தி என்ன என்றால் வடக்கில் பஞ்சாயத்து ரோடு, மேற்கில் தம்பி குமரேசன் தனிப்பட்ட நிலம், குமரேசன் நிலத்திற்கு தெற்குபக்கம் குமரேசன், காளிரத்தினம் கூட்டு நிலம் உள்ளது, கிழக்கில் சங்கர், கந்தன், கம்பம்பட்டியான் நிலம் உள்ளது. தெற்கில் பழனி என்பவர் நிலம் உள்ளது- காளிரத்தினம் தாக்கல் செய்த வழக்கு சொத்தின் கிழக்கில் ஓடை உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் மேற்குபுறம் மணி என்பவர் நிலம் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து காளிரத்தினத்திற்கு எப்படி பாத்தியம் என்றால் காஞ்சான் (எ) காளி என்பவரிடமிருந்து குமரேசனும், காளிரத்தினமும் சேர்ந்து கூட்டாக கிரயம் பெற்றதாக கேள்விப்பட்டேன், ஆனால் எனக்கு நேரடியாக தெரியாது. என் முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் காளிரத்தினம் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்து நீண்ட நாள் அனுபவத்தின்படி ஏற்பட்ட பட்டா படி பாத்தியம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். காளிரத்தினம் தாவா சொத்தில் எதன் அடிப்படையில் 35 வருடங்களாக அனுபவம் செய்ததாக சொல்லியுள்ளீர்கள் என்றால் என்னுடைய நிலத்தின் வழியாக காளிரத்தினம் செல்லவேண்டும். பஞ்சாயத்து ரோட்டிற்கு மேற்கு பக்கம் என்னுடைய நிலம் உள்ளது. என் நிலத்தை தாண்டி தான் அவர் நிலத்திற்கு போக வேண்டும். அதனால் அவர் அனுபவம் எனக்கு தெரியும். என்னுடைய நிலத்தை நான் 1972 ஆம் வருடம் என் முன்னோர்கள் வாங்கினார்கள். தாவா சொத்தையும், வாதியின் சகோதரிகள் தாக்கல் செய்த வேறு வழக்கின் சொத்தையும் வாதியின் தகப்பனார் காஞ்சான் (எ) காளி என்பவரிடமிருந்து கிரயம் பெற்றார் என்றால் சரியல்ல. காளரத்தினம் மற்றும் குமரேசன் கிரயம் பெற்ற கிரய ஆவணத்தை நான் பார்த்துள்ளேன். எந்த தேதியில் கிரய ஆவணம் ஏற்பட்டது என்றால் தெரியாது- கிரயம் எவ்வளவு தொகைக்கு கிரயம் பெறப்பட்டது என்றால் தெரியாது- காளிரத்தினம் தாக்கல் செய்த வழக்கு சொத்து காஞ்சான் (எ) காளி என்பவரிடமிருந்து காளிரத்தினம் மற்றும் குமரேசன் கிரயம் பெற்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை

நேரடியாக பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். தாவா சொத்திற்கு வடக்கில் கிழமேலாக பஞ்சாயத்து சாலை செல்கிறது என்றால் சரிதான். தாவா சொத்தையும் பஞ்சாயத்து சாலையும் பிரிப்பது போல இடையில் வரப்பு உள்ளதா என்றால் வடக்கில் முட்டுக்கல் தான் உள்ளது. வரப்பு இல்லை. அ.வ.எண்.186/2012 வழக்கு சொத்தில் வடபுறம் வரப்பு உள்ளது, அந்த வரப்பிற்கு வடக்கில் தான் கிழமேலாக செல்லும் பஞ்சாயத்து சாலை உள்ளது என்றால் சரியல்ல. பஞ்சாயத்து ரோட்டின் இருபுறமும் புறம்போக்கு நிலம் உள்ளது. புறம்போக்கு நிலத்தின் ச.எண் என்ன என்றால் தெரியாது. காளிரத்தினம் நிலத்தை நான் அளந்து பார்த்தேனா என்றால் இல்லை. அ.வ.எண்.186/2012 வழக்கு சொத்தில் தார்சு வீடு ரோடு ஓரமாக இருந்தது என்பது பொய் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் வழக்கு சொத்திற்கு இருபுறமும் புறம்போக்கு நிலம் இல்லை என்றாலும், பஞ்சாயத்து சாலைக்கு தெற்குபுறம் புல எண்.122/1ஏ சொத்து தான் உள்ளது என்றாலும் சரியல்ல. புல எண்.122/1ஏ குமரேசன் தார்சு வீடு உள்ளது என்றாலும், அந்த தார்சு வீடு நிலத்தின் நடுவில் உள்ளது என்றாலும், பஞ்சாயத்து சாலை ஒட்டி தார்சு வீடு இல்லை என்றாலும் சரியல்ல. அ.வ.எண்.186/2012 மற்றும் அ.வ.எண்.265/2012 இரு வழக்கு சொத்துக்களும் குமரேசன், காளிரத்தினம் அவர்களின் தகப்பனார் முத்து கவுண்டரின் சுயாஜ்ஜித சொத்துக்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் புல எண்.122/1ஏ என்ற சொத்தின் பழைய புல எண்.122/1 என்றால் தெரியாது. புல எண்.122/1, 122/3 ஆகிய நிலங்கள் முத்து கவுண்டரின் கிரய நிலங்களாக காட்டி வாதி காளிரத்தினமும், பிரதிவாதி குமரேசனும் சுமார் 16 சென்ட் நிலத்தை முத்துசாமி என்பவருக்கு விற்றுள்ளார்கள் என்பது தெரியுமா என்றால் தெரியாது. அ.வ.எண்.186/2012 வழக்கு தாவா சொத்து அரசாங்க சொத்து என்றும் காளிரத்தினம் நீண்ட நாள் அனுபவத்தின் அடிப்படையில் பட்டா பெற்றதாக சொல்வது மோசடியானது என்றால் சரியல்ல. பஞ்சாயத்து சாலைக்கு தெற்கில் உள்ள காளரத்தினம் நிலத்தில் குமரேசனின் தார்சு வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். ஆனால் அதன் ச.எண் தெரியாது. காளிரத்தினம் நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் போது மோசடியாக பட்டா பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. வாதி காளிரத்தினம் எங்கு வசிக்கிறார் என்றால் அவருடைய நிலத்தில் குடியிருக்கிறார். வாதி காளிரத்தினம் தாவா சொத்தில் தான் குடியிருந்து வருகிறார். ஓடைக்கு தெற்குபக்கம் உள்ள நிலத்தில் குடியிருக்கவில்லை. ஓடைக்கு கிழக்குபக்கம் உள்ள சொத்திற்கு குமரேசன் பெயரில் பட்டா உள்ளது என்றால் தெரியாது. வாதி ஓடைக்கு கிழக்குபக்கம் உள்ள குமரேசன் நிலத்தில் தான் குடியிருக்கிறார் என்றால் சரியல்ல. புல எண்.122/1ஏ சொத்தில் வாதி குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. வாதி வீட்டிற்கு சென்றுள்ளேன். ஆனால் அவரது வீட்டின் இலக்கம் எனக்கு தெரியாது. வாதியின் வீடு கூரை வீடு ஆகும். புல எண்.122/1ஏ சொத்தின் கிழபுறம் குமரேசனும், மேற்குபுறம் வாதி காளிரத்தினமும் வாய்மொழியாக பிரித்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் போது வாதி பெயரில் ஏற்பட்ட பட்டா நிலத்தில் பிரதிவாதி குமரேசன் வீடு கட்டியும், பிரதிவாதி

குமரேசன் பெயரில் ஏற்பட்ட பட்டா நிலத்தில் வாதி வீடு கட்டியும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அ.வ.எண்.186/2012 மற்றும் அ.வ.எண்.265/2012 இரு வழக்கு சொத்துக்களிலும் வாதி மற்றும் பிரதிவாதி கூட்டு சுவாதீனத்தில் உள்ளார்கள் என்றால் ஒரு ச.எண்ணில் மட்டும் தான் கூட்டு சுவாதீனத்தில் உள்ளார்கள். எந்த ச.எண்ணில் கூட்டு சுவாதீனத்தில் உள்ளார்கள் என்றால் தெரியாது- வாதி காளிரத்தினத்தின் உடன் பிறந்த சகோதரிகள் பெயர் தெரியுமா என்றால் சகோதரிகள் அடிக்கடி பெயர் மாற்றம் செய்வார்கள் ஆகையால் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் 2-ம் வாதி யார் என்றால் குமரேசன். காளிரத்தினம் 27 வருடங்களுக்கு முன்பு யாருக்கு திருமணம் செய்து வைத்தார் என்றால் பெயர் தெரியாது, அவருடைய சகோதரிக்கு திருமணம் செய்து வைத்தார். எந்த தேதியில் திருமணம் செய்து வைத்தார் என்றால் தெரியாது. வாதி கேட்டுகொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை நான் நேரில் பார்த்ததில்லை என்றாலும், வழக்கு சொத்துக்கள் பற்றி எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல.

ஒம்/- கே.நம்பிராஜன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பாப்பிரெட்டிப்பட்டி.